பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி — வியாழன் வெளியீடு.

பேர் — பொள்ளாச்சி. 8—11—51. விலை அரையணு. 4-பக்கம். — வெற்றி

காங்கிரஸிற்கு வோட் சேகரிப்பதெப்படி?

ஊழியர்களே கவனியுங்கள்!

சென்னை சட்டசபைக்கு வரும் பொது தேர்தலில் பொள்ளாச்சி டவுன் தொகுதிக்கு பொதுஸ்தானம் ஒன்று, ஹரி ஜன ஸ்தானம் ஒன்று. தேர்தல் ஜனவரி 12-ம் தேதி சனிக்கிழமை.

காங்கிரஸ் ஊழியர்கள் கவனம்செலுத் திவிபரமாக வோட்டர்களிடம் முன் கூட்டியே சொல்லிவிடவேண்டிய விஷயம்ஒரு வோட்டர் வோட்டுச்சாவடிக்குச் சென்றவுடன் அங்குள்ள போலிங் அதிகாரி, வோட்டர் பெயர் ஜாபிதாவில் இருக்கிறதா? என்பதைச் சரிபார்த்துக்கொண்டு வோட்டரின் இடதுகையில் ஆள் காட்டி விரலில் அழிக்க முடியாதமைதடவி விட்டுஇரண்டு வாக்குச்சீட்டுகளை (பேலட் பேப்பர்) கொடுப்பார் உள்ளே சென்றவுடன் எத்தனை அபேக்ஷகர்கள் போட்டியிடுகிறார்களோ அத்தனைபெட்டிகள் வைத்திருக்கும். உதாரணமாகப் பொதுத்தொகுதிக்கு மூன்று பேரும், ஹரிஜனத் தொகுதிக்கு மூன்றுபேரும், போட்டியிடுவதாக வைத்துக்கொள்வோம் அப்போது அங்கேமுகலில்; பொதுத்தொகுதிக்கு மூன்றுபெட்டிகளும், ஒரு அடிக்கு அப்பால் தேவரிசையில் ஹரிஜன த்தொகுதிக்கு மூன்றுபெட்டிகளும் வைத்திருக்கும். இந்த ஆறு பெட்டிகளிலும், வோட்டர் தன்னிடமுள்ள இரண்டு சீட்டுகளையும்: தனித்தனியாக எந்தப் பெட்டியில் வேண்டுமானுலும் போடலாம். ஆனல் ஒரே பெட்டியில் இரண்டு சீட்டு களையும் போடக்கூடாது. அப்படிப் போட்டால் ஒன்று செல்லாது. ஆகவே இந்த இடத்தில் ஜாக்கிரதையாக கவனம் செலுத்தும்படி முன்கூட்டியே எச்சரிக்கைசெய்துவைப்பதுநலம். அதாவது அங்கே உள்ளமொத்தப்பெட்டிகளில் இரண்டு பெட்டிகள். **நுகந் தாங்கிய காளைச் சின்னமாகக் கொண்ட பெட்டிகள் இருக்கும்.** [illegible]றில் ஒவ்வொரு பெட்டியிலும், ஒரு சீட்டு வீதம்,

டவுன் தொகுதியின்
காங்கிரஸ் அபேக்ஷகர்

ஸ்ரீ என். மகாலிங்கம் B. Sc.

காங்கிரஸிற்கு வோட்போட விருப்புபவர்கள் போடவேண்டும். போட்டபின் வெளியேவரும்போது அந்த இடத்தில் ஒருபோலிங் ஆபீஸர் இருப்பார். அவர் பார்லிமெண்ட்டுக்கு வோட் போட ஒரு வாக்குச்சீட்டைவாக்காளரிடம் கொடுப்பார். அதை வாங்கிக்கொண்டு அவர்காட்டும் இ[illegible]தில் உள்ளே போனல் அங்கும் பெ[illegible]கள் இருக்கும். அங்கேயும் நுகந் தாங்கியகா[illegible]மாடுகளைச்சின்னமாகக் கொண்ட பெட்[illegible]ன்று இருக்கும். அதில் காங்கிரஸிற்கு வே[illegible] போட விரும்புபவர்கள் போட்டு விடவே[illegible]டும், இந்த வோட் போடும் விபரங்களை [illegible]கிரஸ் ஊழியர்கள் முன் எசசரிக்கையாக [illegible]ந்து வாக்காளர்களிடம் சொல்லிவைப்[illegible] நலம். இதில் ஊழியர்கள் கவனம் செலு[illegible] வேண்டும்,

இதே போல்தான் மற்றகட்சியி[illegible]ரும் சுயேச்சைவாதிகளும் தங்கள்பெட்டி [illegible] என்பதையும் மற்ற விபரங்களையும் வாக்[illegible]ரிடம் எடுத்துச்சொல்வது நல[illegible]. கிணத்[illegible]டவு தொகுதியைப்பொருத்தவரை ஹரி[illegible]த்தொகுதி அங்கு கிடையாது, பொது தொகுதி மட்டும்தான். ஆகையால் வோ[illegible]டரிடம் ஒரு சீட்டுத்தான் கொடுப்பார்[illegible] மற்றபடி விபரங்களெல்லாம் மேலே [illegible]தியுள்ளவாறுதான் இருக்கும்.

நுகந் தாங்கிய காளைகளைச் சின்னமாகக் கொண்ட காங்கிரஸ் பெட்டிக்கே வோட் செய்யுங்கள்

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 8—11—51. வியாழன்.

வெற்றி நமதே!

பொள்ளாச்சி தாலூக்காவைச்சே
இரண்டு தொகுதி காங்கிரஸ் அபே
க்ஷகர்களும் தங்கள் தேர்தல்
வேலையை மும்முரமாக ஆரம்பித்து விட்ட
ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று
ப்ரமுகியஸ்தர்களையும் வாக்காளர்களையும்,
நேரில் பார்ப்பது, பொதுக்கூட்டங்களை
நடத்துவது முதலியவைகளை நன்ருகத்
திட்டமிட்டு வேலைசெய்து வருகின்றனர்.

டவுன், தாலூக்கா காங்கிரஸ் கமிட்
டியினரும் தேர்தல் வேலையில் அதிக கவ
னம் செலுத்தி பிரச்சார ஏற்பாடுகளைச்
செய்கின்றனர். இளைஞர் காங்கிரஸ் வாலி
பர்களும் தங்கள்பங்கை செவ்வனேசெய்
து வருகின்றனர். நம் தாலூக்காவைப்பொ
றுத்தவரை காங்கிரஸ் மகத்தான வெற்றி
பெறும் என்பதில் யாருக்கும் சந்தேகமே
வேண்டியதில்லை. கிணத்துக்கடவுத்தொ
குதியைப் பொருத்தவரை போட்டியேஇ
ருக்காது என்று கருதுகிரும். ஒருக்கால்
போட்டியிருந்தாலும் சோஷலிஸ்ட் கக்ஷி
யினர் போட்டியிடலாம். பொதுவாக ஸ்ரீ
வி. கே. பி. கவுண்டருக்கு அந்தத்தொகு
தியில் நல்ல செல்வாக்கும ஆதரவும்இரு
க்கிறது, ஏற்கெனவேயே ஸ்ரீ கவுண்டர்
அந்தத்தொகுதியில் நல்ல தொடர்புள்ள
தாலூக்கா விவசாயிகள் சங்கத்தின்
தலைவர் அங்குள்ள அனைவரின் நன்மதிப்பு
க்கு உரித்தானவர் ஆகவே இவருக்கு
நல்ல ஆதரவு இருக்கிறது. டவுன் தொகு
தியைப் பொறுத்தவரை காங்கிரஸிற்குப்
போட்டியாக கம்யூனிஸ்ட் கக்ஷியினரும்,
சோஷலிஸ்ட் கக்ஷியினரும் போட்டியிடு
வதாகத்தெரிகிறது. சுயேட்சையாகவும்
போட்டியிடுவார்கள் போல் இருக்கிறது.
பொதுவாக டவுன்தொகுதியில் ஹரிஜன
ஸ்தானம் உள்பட பலத்த போட்டி
இருக்கும் என்ருலும் காங்கிரஸ் அபேக்ஷ
கர்கள் மகத்தான வெற்றி அடைவார்கள்
என எங்கும் எதிர்பார்க்கப்படுகிறது. என
வே ஊழியர்களும், தொண்டர்களும் காங்
கிரஸ் கமிட்டியாரும் திறம்படவேலைசெய்
யவேண்டுகிரும். தேர்தல் வேலைகளுக்கு
சகல உதவிகளும் அபேக்ஷகர்கள் செய்யு
ம்படி வேண்டுகிரும் நிச்சயம் வெற்றி
நமதே! வீறுகொண்டெழுங்கள்!!

குருவி ஜோசியம்.

இந்த வாரம் குருவிஊழியர்கள் கூட்
டத்தை உன்னிப்பாக கவனித்தது. தேர்
தல் போர்டார் ஊழியர்களை கவனிக்கவி
ல்லை, கோவை ஜில்லாவில் ஊழியர்களை
உதாசீனம் செய்துவிட்டனர் தலைவர் ஸ்ரீ
காமராஜ் உதவி செய்யவில்லை என்றெல்
லாம் பேசப்பட்டது. ஊழியாகள் கூட்ட
த்தில் பலர்பேசியதும் முற்றிலும்உண்மை
தான் ஆனல் ஒன்றைக் கவனிக்கவேண்
டும் ஊழியாகள்.

தேர்தல் போர்டில் நமது ஜில்லா
வைச்சேர்ந்தவர்கள் இரண்டு மெம்பர்கள்
போதாக்குறைக்கு ஜில்லா காங்கிரஸ்கமி
ட்டித்தலைவரையும், காரியதரிசியையும்,
வேறு போர்டார் யோசனைகேட்டுள்ளனர்.
இந்நிலையில் அநேகமாக இவர்கள சிபார்சு
கள்தான் போர்டில் முடிவு செய்யப்பட்
டிருக்கிறது. ஊழியர்களைஒதுக்குவதற்கு
மேற்சொன்னவர்கள்தான் ஜவாப்புசொல்
லவேண்டும்.

தலைவர் காமராஜ்மீது குறைசொல்
வதில் அர்த்தமில்லை, அவர் முடிந்த அள
வுஊழியர்களுக்காக வாதாடியுள்ளார். மே
ட்டுப்பாளையம் அஸாத் – ஆர். குப்புசாமி
போன்ற இரண்டு ஊழியர்களாவது எடுக்
கப்பட்டார் என்ருல் தலைவர் காமராஜ்
தான் காரணம்.

மற்றஇடங்களிலும் கோவை பவானி
பல்லடம் போன்றஇடங்களில் ஊழியர்க
ளைப்போட்டுவெற்றிக்கு வேலைசெய்திருக்
கலாம். அதில் தேர்தல்போர்டார் தவிற
மேலே சொன்ன நமது ஜில்லாத்
தலைவர்தான்கள்தான் காரணம். இவர்கள்
தாங்கள் மட்டும் எப்படியும் எம். எல். ஏ
யாக வரவேண்டுமென்பதில் மட்டும் அதி
கம் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்
கள் போலிருக்கிறது.

ஊழியர்களைப்பற்றி சிறிதும்கவனம் செலு
த்தாத இவர்களுக்கு தேர்தலில் ஊழியர்
கள் தகுந்த பாடம் கற்பித்தால் போது
ஊழியர்கள்யாரும் இவர்கள்பக்கம்போகா
மல் வேறு தொகுதிகளுக்கு சென்றுவிட்
டால்அப்போது உணருவார்கள் ஊழியர்க
ளின் அவசியத்தை, அதன்பின் பாவது ஊழி
யர்களுக்கு மரியாதை கொடுக்கும் புத்தி
இவர்களுக்கு ஏற்படும் என்று குருவி
ஜோசியம் சொல்லுகிறது அடுத்த வாரம்
அபேக்ஷகர்களைப்பற்றி குருவி ஜோசியம்
சொல்லும்.

தேர்தல் பாட்டு.

(கிளிக்கண்ணி மெட்டு.)

காந்தி மஹான் வகுத்த
காங்கிரசுக் கொள்கை ஒன்றே
சாந்தி உலகினுக்கே கொடுக்கும்
சாமி வரப்ரசாதம்

ஆளும் காங்கிரஸ்
நுகந் தாங்கும்
காளைமாடு தேர்தல் பெட்டி
அடையாளம் மறவாதீர்கள
ஜனங்களே அறிவீர் – பொள்ளாச்சி வாசி

வேள் குடி ராஜ வம்சம்
வீ, கே பி. கவுண்டர் அம்சம்
ஆள் ஏது நிருவாகத்தில் அவர் போல்
ஆம் அவர்க்கே வோட்செய்யுங்கள்

பாட்டாளி மக்கள் செய்யும்
பாடுணர்ந்து நன்மை செய்யும்
தேட்டாளர் மஹாலிங்கம் வெற்றிபெற
தேர்தலிலே வோட் செய்யுங்கள்

சோஷலிசம் கம்யூனிசம்
சொல்லுகின்ற செய்கை எல்லாம்
ஆசையின்றி இப்போதில்லை-ஜனங்களே
அது வர நாளாகுமே!

(கவி பூமி பாலகதாஸ்)

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,

எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்

செய்து கொடுக்கப்படும்.

தாலூக்கா காங்கிரஸ்.

சென்ற 1—11—51 ல் மாலை 4–மணிக்கு தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி ஆபீஸில் நகர தாலூக்கா காங்கிரஸ் பஞ்சாயத்து மெம்பர்கள் அடங்கியகூட்டம் ஸ்ரீ எம். ராமசாமி தலைமையில்நடைபெற்றது. வரும் தேர்தலில் காங்கிரஸிற்கு வெற்றிதேட எப்படி தி[illegible]டம்வகுத்து வேலைசெய்ய வேண்டுமென ஸ்ரீமான்கள் ராமசாமிக் கவுண்டர், ஆறுமுகம், கந்தசாமிக்கவுண்டர், பி. எஸ். வேலுசாமி, ஸ்ரீதாண் பிள்ளை, திருமலைசாமி, என். மகாலிங்கம், வி. கே. பழனிசாமிக் கவுண்டர், திருமூர்த்தி, சுப்பிரமணியம், காந்திராமசாமி, வெங்கடாசலம் முதலியோர்கள் பேசினர்.

டவுன் காங்கிரஸ்.

4...11...51 மாலை 4-மணிக்கு நகர காங்கிரஸ் சமிட்டியின் சா[illegible]பில் ஸ்ரீ எம், ராமசாமி தலைமையில் நடைபெற்ற ஊழியர்கள் கூட்[illegible]தில் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்கு நாம் செய்யவேண்டியது என்ன[illegible] என்பதுபற்றி ஸ்ரீமான்கள் வி, வேலுசாமி. ஏ. கே. சுப்ரமணியம், பி, டி[illegible] சென்னப்ப கவுடர், மகமத்ஜான், ஏ. என். ராஜா சாயபு, வாசுதேவன்[illegible] ஷண்முக ரெட்டியார், பாலகிருஷ்ணமூர்த்தி செட்டியார், சேதுரா[illegible]சாமி, தர்மலிங்கம், நா ராயண அய்யர், முத்துக்கவுண்டர், சாஸ்திரியா[illegible] கந்தசாமிக்கவுண்டர். பி. எஸ். வேலுசாமி, வெங்கடாசலம் முதலியோர் பேசியபின் நகரில் வேலைசெய்ய 10-பேர் கொண்டகமிட்டி அமைக்கப்பட்டது

4-ம் தேதி ஊ. முத்தூரில் ஸ்ரீ முத்துமாரியப்பகவுண்டர் தலைமையில் திரு. என். மகாலிங்கம் இளைஞர் காங்கிரஸ் கிளையைத்துவக்கி வைத்தார். கோவை கே. ராஜகோபால், அ. பாசித் கொள்கைகளை விளக்கிப்பேசினர். காரியதரிசி சுப்பையன் நன்றி கூறினர்.

பொள்ளாச்சி பஜார்!

[illegible]ந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

R. M. D. C. Col. No. 1256.
எம்மிடம் புதன், வியாழனில் பூர்த்தி
செய்த [illegible]ப்பன் பெற்றுக் கொள்ளப்
படும். T. S. ஆறுமுகம்,
S. M. ஜோசியர் சந்து,
பொள்ளாச்சி.

"பூஞ்சோலை"
[illegible]றுவர் சிறுமியரின் மாதப்பத்திரிகை
[illegible]களரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.
[illegible]லை 4–அணா. பொள்ளாச்சி ஏஜண்ட்,
M. மலையப்பன்,
15, ஜுபிளிவெல்ரோடு, பொள்ளாச்சி.

வீடு விற்பனை.

வெங்கட்டரமணய்யர் வீதியில் 16, 17 58 நெ, வீடுகள் சகல வசதிகளுடன் கூடியதுவிற்கப்படும். தேவையுள்ளவர்கள் நேரில் பார்த்து பேசி முடித்துக்கொள்ளலாம். பகிரங்க விற்பனை தேதிவிவரங்களை நோட்டீஸில் காண்க

M. பாலசுப்ரமணியம், பொள்ளாச்சி.

வரும் தேர்தலில்
பொள்ளாச்சி டவுனில் உள்ள
போலிங் பூத்துகள்.

—0—

மரப்பேட்டை எலிமெண்டரி ஸ்கூல்.
இரண்டாவது வார்டு எலிமெண்டரி ஸ்கூல்.
பாலகோபாலபுரம் மிடில் ஸ்கூல்.
முனிசிபல் ஹைஸ்கூல்.
முனிசிபல் முசாபரி பங்களா.
வடுகபாளையம் முனிசிபல் எலிமெண்டரி ஸ்கூல்.
பெண்கள் ஹைஸ்கூல்.
குமாரபாளையம் புது எலிமெண்டரி ஸ்கூல்.
புது ஹைஸ்கூல் (முனிசிபாலிட்டிக்கு[illegible] மேல்பு[illegible]

மேற்கண்ட இடங்களில், டவுனில்உள்ள வாக்காளர்கள் வோட்டுகள் பதிவுசெய்யஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வாக்காளர்கள் முன்கூட்டியே தாங்கள் எந்த போலிங்பூத்துக்குச் சென்றுவோட்டே[illegible]வது என்பதைத் தெரிந்து கொள்வ[illegible] நலம்.

வினு விடை.

வக்கீல் தம்மை வாழ்த்துவதேன்?
குக்கல் தம்மை தாழ்த்துவதேன்?
கணக்கன் மூளை ஓய்வதேன்?
கட்டுக் குடப்பம் தேய்வதேன்?

விடை.

எச் - சிக்கலையும் எடுப்பதினால்!
எச்சிக்கலையும் எடுப்பதினால்!
கூட்டிப் - பெருக்கிக் - கழித்தலினால்!
கூட்டிப்பெருக்கிக் கழித்தலினால்!

கோவை கர்னுடிக்கில் 2-வது வாரம்.

சீர்மிகும் சீர்திருத்தக் கதை!
சிங்காரமான பாட்டு!!
கருத்துமிகும் களிப்பு வசனம்!!!
நேஷனல் புரொடக்ஷன்ஸ்.

சிங்காரி. (தமிழ்.)

நடிகர்கள்:
லலிதா — பத்மினி, ராகினி, டி. ஆர். ராமச்சந்திரன்,
வி. கே. ராமசாமி, டி. பாலசுப்ரமணியம், சகஸ்ரநாமம்
மற்றும் பலர்.

கோவை – நீலகிரி ஜில்லா உரிமைக்கு:–
கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,
ராஜா வீதி, கோயமுத்தூர்.

தபால் பெட்டி நெ. 25.

N. B. ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன்
கிடைக்கும்.
Prop. B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்,

குயிலின் குரல் இனிமையானது!
ஆனல் அதைவிட இனிமையானது

பல்லடம்
குயில் மார்க் பீடிகள்

காரம், மணம், குணம் ஒருங்கே அமையப்பெற்ற
குயில் மார்க் பீடிகள்
எங்கும் கிடைக்கும்.
Prop: P. A. ரஹிம் சாயபு.
பல்லடம்.
ஏஜண்டு:
A. K. யாகூப் சாயபு, பொள்ளாச்சி.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi